1981 மார்ச் 31]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்மாதிரி பல்கலைக் கழகம் ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நாம் சொல்ல இயலாது ; பரிசீலனைக்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்றும், கல்விக்குப் பல்கலைக் கழகம் என்றும், பொறியியல் பல்கலைக் கழகம் என்றும் இருக்கின்ற நேரத்தில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற அடிப்படையைக் கருதி, எல்லாவற்றிற்கும் முக்கியமானது இந்த மருத்துவத் துறை என்பதைக் கருத்திற் கொண்டு, இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை உடனடியாக ஏற்படுத்துவதற்கான பரிசீலனையை வேகமாகச் செய்து அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது நல்ல யோசனை. இதைத்தான் நான் சொன்னேன், முன் வர வேண்டுமென்றுதான் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் எல்லா சாத்திய கூறுகளையும் ஆராயலாம் என்று நான் சொன்னேன்.

பள்ளிச் சிறார்களுக்கு சலுகை பயணச்சீட்டு வழங்கும் திட்டம்.

*வினா எண். 574—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வழங்குவது போல் பள்ளிச் சிறார்களுக்கு மற்ற கழகங்களின் மூலம் பாஸ் கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு க. முத்துசாமி :

அதே போன்று இல்லை. எனினும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர, மற்ற போக்குவரத்துக் கழகங்களில் மாதாந்திர சலுகை பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு. எனவே இந்த ஆண்டில் ஊனமுற்ற பள்ளிச் சிறார்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 31

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, சலுகை அடிப்படையிலே நாம் இப்பொழுது பயணச் சீட்டுகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பதில் அளிக்கும் நேரத்திலே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களின் துணைவியாரும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கப்படும் என்று சொன்னார்கள். அண்மையில் நானும் என் மனைவியும் கன்னியாகுமரிக்குப் போய் வந்தோம் என்னுடைய மனைவி பயணம் செய்ததற்குக் கட்டணம் வசூலித்தார்கள். இந்தத் திட்டம் ஏன் அமல் நடத்தப்படவில்லை. அமைச்சர் அறிவித்த பிறகும் அதை அமல் நடத்துவதிலே இவ்வளவு காலதாமதம் ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இந்தக் கேள்வியை அனுமதித்ததற்குக் காரணம், அவர்களுடைய சொந்தப் பிரச்னை என்பதால்தான்.

திரு என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, என்னுடைய சொந்தப் பிரச்னை மட்டுமல்ல. எல்லா உறுப்பினர்களின் பிரச்னைதான்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் சட்ட மன்றத்திற்கு வருகிறார் என்று கருதிக்கொண்டிருந்தேன் ; ஆனால் அவர் கல்லூரிக்கும், பள்ளிக்கும் போய்க் கொண்டிருக்கிறார்போல் தெரிகிறது. காரணம், இந்தக் கேள்வி மாணவர்களைப் பற்றியது. இருந்தாலும் சொல்கிறேன். அப்படிக் கட்டணம் வசூல் செய்யக்கூடாது ; அவ்வாறு கட்டணம் வசூலித்திருப்பதாகக் குறிப்பாகச் சொன்னால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) சொல்லியிருக்கிறீர்கள் ; அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9—50]

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, இது போன்ற பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் அரசுப் போக்குவரத்து இல்லாத இடங்களில், தனியார் பஸ்களில் சென்றால், இது போன்ற சலுகை வழங்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 31]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பேருந்துகளிலே அந்தச் சலுகையை வழங்கிக் கொண்டிருக்கிறோம். தனியார் பேருந்துகளில் அவர்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அங்கு கூட முடியுமா என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு எல்லாம் 1/2 கட்டணம் வசூலிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டும்தான் 1/2 கட்டணம். அதற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் இல்லை. அதற்கு மேலே உள்ள குழந்தைகள், 12 வயதிற்குள் நிச்சயமாகப் பள்ளிக் கூடம் போய்க் கொண்டுதான் இருக்கும். அவர்களுக்கு இந்தச் சலுகை பொருந்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது போல் நிருபர்களுக்கு பாஸ் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே கொடுத்தாகி விட்டது. காலதாமதமாகக் கேட்கிறீர்கள், பத்திரிகையிலே வராது.

தலை பாதுகாப்பு கவசம் அணிதல்.

*வினா எண். 575—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் கட்டாயமாக 'தலை பாதுகாப்பு கவசம்' (Helm‑t) அணியவேண்டும் என்ற உத்தரவை கட்டாயமாக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மத்திய அரசு, 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய பிரிவு 85-ன்படி ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுநர், பின்னால் அமர்ந்து செல்பவர்கள் கட்டாயமாகத் தலைக் கவசம் அணிய வேண்டும் என்று உத்திரவிட்டது. இது 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் அமுலுக்கு வரும் என்று சொன்னார்கள். அதற்குப் பின்பு அந்த உத்தரவு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.